1990 மார்ச் 23] *[டாக்டர் மு. கருணாநிதி]*

என்று புலன் விசாரணையில் இன்னமும் முடிவாகவில்லை. அதற்காக அந்த வழக்கே பதிவு செய்யப்படாமல் விட்டு விடப்படவும் இல்லை. அதையொட்டி, ஒரு சமரச முடிவு காண்பதற்காக அதிகாரிகள் — மாவட்ட ஆட்சித் தலைவர்—கோவையிலே ஒரு அமைதிக் குழுவைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்து இரு சாராரையும் அழைத்துப் பேசி, நடைபெற்ற சம்பவங்களுக்காக அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஒரு முஸ்லீம் பெரியவர்கூட தன்னுடைய ஆழ்ந்த மனக் கவலையைத் தெரிவித்து இருசாராருமே இதை ஒரு வகுப்புவாதச் சம்பவம் என்ற பிரச்சாரத்தில் ஈடுபடுவதில்லை என்று சொல்லியிருப்பதாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறார்.

ஒரு கிருஸ்தவ இளைஞர் இப்படிப்பட்ட நிலைக்கு ஆளாகி விட்டால் அது கிருஸ்தவ சமுதாயத்திற்கே எதிர்ப்பான ஒரு காரியம் என்று எண்ணுவதோ அல்லது ஒரு இந்து இளைஞன் இப்படிப்பட்ட ஒரு நிலைக்கு ஆளாகிவிட்டால் இந்து அல்லாத மற்ற மதத்தவர்கள் அல்லது முஸ்லீம்கள் அல்லது கிருஸ்தவர்கள் செய்த காரியம் என்று திடீரென்று முடிவுக்கு வருவதோ, அல்லது முஸ்லீம் இளைஞனுக்கு இப்படியொரு கதி ஏற்பட்டுவிட்டால், அதைச் செய்தவர் ஒரு இந்து இளைஞராகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வருவதோ — முடிவுக்கு வர நமக்கு உரிமை உண்டு என்றாலும் கூட, — அந்த முடிவு பல விரும்பத்தகாத வேறு பல முடிவுகளுக்கு நம்மை இழுத்துக் கொண்டு போய்விடக் கூடாது என்பதிலே மிகுந்த ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்பதை எடுத்துச் சொல்லி, சிறுபான்மை மக்களுக்கு இங்கே உள்ள எல்லா உறுப்பினர்களும், குறிப்பாக இந்த அரசும் என்றைக்கும் பாதுகாப்பாக இருக்கும் என்ற உறுதியை அளித்து இந்த வகையில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

(ஈ) சென்னை செம்பியம் காவல் நிலையத்தில் சில பெண்கள் கொடுமைப்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் பெண்கள் கொடுமைப் படுத்தப்படுவது தொடருகிறது என்பதைக் குறிக்கும் நிகழ்ச்சி ஒன்றை வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சென்னை நகரில் சி. 5. செம்பியம் காவல் நிலையத்தில் சமீபத்தில் மூன்று பெண்களை சட்டவிரோதமாகக் காவல் நிலையத்தில் கஸ்டடியில் வைத்து, மிருகத்தனமாக அவர்களைக் கொடுமைப் படுத்திய நிகழ்ச்சி ஒன்று நடந்துள்ளது. கொடுமைகளிலிருந்து பெண்களைப் பாதுகாக்க வேண்டிய போலீசாரே

10-35 மணி

அதில் ஈடுபட்டிருப்பது அனுமதிக்கப்பட முடியாதது என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள். இது ஏதோ தனிப்பட்ட சில பெண்களின் நிகழ்ச்சியாக மட்டும் பார்க்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். போலீஸாரே இந்தக் கொடுமையைச் செய்வதால் இது பெண்ணினத்தின் பாதுகாப்பில் ஏற்பட்ட ஒரு பிரச்சினையாகும். இது ஒரு சமுதாயப் பிரச்சினையாகவும் ஆகிறது. உழைக்கும் மகளிர் சங்கத்தில் உள்ளவர் குடும்பக் கட்டுப்பாடு அமைப்பாளராகச் செயல்படுபவர் திருமதி. எல்லாம்மாள் என்பவர். 11—2—1990 அன்று சி. 5 காவல் நிலையத்திலிருந்து எஸ்.ஐ. மற்றும் சில போலீஸார் வந்து ஒரு திருட்டுக் குற்றம் தொடர்பாக ஒரு நபரைப் பற்றி விசாரிப்பதாக வீட்டிலே வந்து தாக்கியிருக்கிறார்கள். ஆனால் அந்த சம்பந்தப்பட்ட நபரோடு 7 ஆண்டுகளுக்கு முன்பே தன்னுடைய உறவு முறிந்துவிட்டது என்று சொன்னபோதிலும் கூட அவர்கள் விடவில்லை. ஸ்டேஷனிலே கொண்டுபோய் அடித்து அனுப்பியிருக்கிறார்கள். மீண்டும் 16—2—1990 அன்று சி. 5 காவல் நிலையத்திலிருந்து வந்து திருமதி எல்லம்மாளை அழைத்துச் சென்று நிர்வாணம் ஆக்கி சப்-இன்ஸ்பெக்டர் லத்தியால் கண்மூடித்தனமாக, அவர் மயங்குகிற அளவுக்கு அடித்திருக்கிறார். அருகிலேயுள்ள தனியார் டாக்டர்களிடம் காட்டியிருக்கிறார்கள். பிறகு காவல் நிலையத்திலே 23 ஆம் தேதி முடிய வைத்திருக்கிறார்கள். அதாவது ஒரு வார காலம் சட்டவிரோதமாக காவல் நிலைய கஸ்டடியில் வைத்திருந்தார்கள். பின்னர் வண்ணாரப்பேட்டையில் உள்ள உன்னுடைய உறவினர் வீட்டில் தங்கினால் போதும், உன்னுடைய சொந்த வீட்டிற்குப் போகக் கூடாது என்று நிபந்தனை விதித்து வெற்றுப் பேப்பரில் கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள் போலீஸார் தொடர்ந்து தொந்தரவு கொடுத்து, வெற்றுப் பேப்பரிலே இரண்டு, மூன்று முறை கையெழுத்து வாங்கியிருக்கிறார்கள்.

இப்படிப் பிரச்சினை எதுவும் ஏற்பட்டால் முதல்வருக்கு ரிப்போர்ட் அனுப்பப்பட வேண்டும். என்று சொல்லப்பட்டிருப்பதால் அந்த வகையில் சம்பந்தப்பட்டவர்களே எழுதிக் கொடுத்திருக்கிறார்கள் என்று சொல்வதற்காக காவல்துறையினர் பாதுகாப்போடு இப்படி எழுதி வாங்கினார்களோ என்னவோ தெரியாது.

ஆனால் பிரச்சினை இதோடு நிற்கவில்லை. மீண்டும் மார்ச் மாதம் 12-ஆம் தேதி நள்ளிரவு $2\frac{1}{2}$ மணிக்கு செம்பியம் காவல் நிலையத்திற்கு ஜீப்பிலே அழைத்துச் சென்று அங்கே மிருகத்தனமாக இந்த அம்மையாரையும், அவர்களுடைய சகோதரிகள் இருவரையும் தாக்கியிருக்கிறார்கள். பிறப்பு

1990 மார்ச் 23] [திருமதி பாப்பா உமாநாத்]

உறுப்பிலே லத்தியால் குத்தியதன் மூலம் இரத்தப்போக்கு ஏற்பட்டும்கூட அவர்கள் விடவில்லை என்ற கொடுமையான நிலைமையினை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். அவர்கள் அஞ்சி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காவலர்கள் கையிலே அகப்பட்டுவிடக்கூடாது என்று. இரவு 10.00 மணிக்கு மேல் என்னுடைய அறைக்கு வந்து ஹாஸ்டலிலே இதைச் சொல்லி விட்டு பயத்தோடு சென்று இருக்கிறார்கள். இப்படிக் கொடுமை செய்வது சட்டவிரோதமானது என்று சப்-இன்ஸ்பெக் டருக்குத் தெரியாதா ? காவலர்களுக்குத் தெரியாதா ? தெரியும். தெரிந்தேதான் செய்கிறார்கள். எமர்ஜன்சி காலத்தில் கொடுமைகளை நானும் அறிவேன். நம்முடைய ஆளுங் கட்சி யைச் சார்ந்திருக்கக்கூடியவர்களும் அறிவார்கள். முதல்வர் அவர்களும் அறிவார்கள். அதுபற்றிக் கூற வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் அதில் பழக்கப்பட்ட காவல்துறையைச் சார்ந்த சிலர் இன்னும் தொடர்ந்து இருந்துகொண்டிருக் கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அவர்களுக்கு எப்படி தைரியம் வருகிறது ? இந்த புதிய அரசு அமைந்ததற்குப் பிறகும் ஏன் அவர்களுக்கு அந்த தைரியம் வருகிறது ? மாண்புமிகு முதல்வர் அவர்கள் எஸ்.பி.-க்களின் கூட்டத்தைக் கூட்டிப் பேசியிருக்கிறார்கள். அதற்குப் பிறகும் இது நடந்துகொண்டு இருக்கிறது.

இதற்கு முன்பு பி. 3 காவல் நிலையத்தில் மாரியம்மாள் என்ற ஜனநாயக மாதர் சங்கத்தைச் சேர்ந்த பெண்மணி தாக்கப் பட்ட விஷயம் சம்பந்தமாக செப்டம்பர் மாதத்தில் முதல்வர் அவர்களுக்கு பலமுறை தந்தி கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இது நீடித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், தெரிந்தே இதைச் செய்கிறார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இதனை முளையிலேயே கிள்ளி எறியவில்லை என்று சொன்னால் உண்மையிலேயே பெண்களின் பாதுகாப்பு பாதிக்கப்படுவதோடு அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர் ஏற் படும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அந்தப் பகுதியில் வாழக்கூடிய பெண்களிடையே ஒரு பதட்ட நிலைமை இருந்து கொண்டிருப்பதன் காரணத்தால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இந்தப் பிரச்சினையை நான் இங்கே எழுப்பியிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படக்கூடாது என்ற நல்லெண்ணத்தோடும் அதே நேரத்தில் சில காவல் துறையினர் செய்கின்ற கடுமையான செயல்கள் கண்டிக்கப்பட வேண்டும் என்கிற குறிக்கோளோடும் திருமதி

[டாக்டர் மு. கருணாநிதி] 1990 மார்ச் 23]

பாப்பா உமாநாத் அவர்கள் இந்தக் கவன ஈர்ப்பினை இந்த அவையிலே ஆளும் கட்சிக்கு வழங்கியுள்ளார்கள். இது குறித்து சில விவரங்களை நான் சொல்ல வேண்டிய நிலையிலே இருக்கிறேன். ஏனென்றால் சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து பாதிக்கப் பட்டவர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் தங்களுக்குச் சாதகமான சில விவரங்களைத்தான் சொல்வார்கள். எனவே நாம் அவைகளை ஆய்ந்து பார்த்து கருத்துக்களைக் கூறவேண்டியவர்களாக இருக்கிறோம்.

சிறையிலே அடைப்பது, லாக் அப்-இலே அடைப்பது, அங்கே அவர்களை இம்சிப்பது, களங்கம் ஏற்படுமாறு நடந்து கொள்வது, இவை எல்லாம் இன்று நேற்றல்ல ; நீண்டநெடுங் காலமாகவே காவல்துறையிலே ஒரு கட்டுப்பாடற்ற, கண்ணியமற்ற செயலாக நடைபெற்று வருகின்றன என்பதை நான் மறுக்கவில்லை. அதிலே எனக்கு இரு வேறு கருத்து இல்லை. இருந்தாலும்கூட குறிப்பிடப்பட்ட இந்தச் சம்பவம் எத்தகையது என்பதை நான் விளக்கியாக வேண்டும். அம்மையார் அவர்கள் இங்கே குறிப்பிட்ட எல்லம்மாள் என்பவர் பெரியார் நகர், செம்பியம் காவல் நிலைய எல்லையிலே வாழ்ந்து வருகிறார். எல்லம்மாளுடைய மகள் பவானியை மேற்படி பெரியார் நகர் நீலான் என்ற நீலகண்டன் என்பவர் திருமணம் செய்துள்ளார்.

10-40 மணி

அந்த நீலகண்டன் பல திருட்டு வழக்குகளிலேயும், கொள்ளை வழக்குகளிலேயும் சம்பந்தப்பட்டுள்ளவர். இன்று அல்ல, 1986 ஆம் ஆண்!டிலேயிருந்தே, அவர்மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டு இருக்கிறார். பழவந்தாங்கல் காவல் நிலையத்தைச் சேர்ந்த நங்கநல்லூரில் ஒரு வீட்டின் கதவை உடைத்து தங்க நகைகள், கைக்கடியாரங்கள் மற்றும் பணத்தைத் திருடிய வழக்கு, ஒட்டேரியில் ஒரு வீட்டில் பூட்டை உடைத்து தங்க நகைகள், கைக்கடியாரங்கள், புடவைகள், டேப் ரிக்கார்டர் மற்றும் ஒரு ஆட்டோ ரிக்ஷா திருடிய வழக்கு, கோடம்பாக்கம் காவல் நிலைய எல்லையிலே சம்பந்தம் என்பவரிடமிருந்து வழிப்பறி செய்து திருடிச் சென்ற குற்றம், ஜோன்ஸ் சாலையில் திருமதி சாந்தம்மாவிடமிருந்து தாலியுடன் கூடிய தங்கச் செயினைத் திருடிய குற்றம், துரைசாமி சாலை சுரங்கப் பாதையில் திருமதி தனம்மாள் அவர்களிடமிருந்து தங்க நகைகளையும், கைக்கடியாரத்தையும் வழிப்பறி செய்த குற்றம், இப்படி பல வழக்குகளில் அவர் சம்பந்தப்பட்டு ஏற்கெனவே தண்டிக்கப் பட்டவர். ராயப்பேட்டை நீதிபதி ஜம்புலிங்கம் தெருவில் சீனிவாசன் என்பவருக்குச் சொந்தமான டி.எம்.டி. 6251 என்ற அம்பாசிடர் காரைத் திருடிச் சென்றவர். இப்படி சென்னை

மாநகரம், செங்கை—அண்ணா மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம் ஆகிய பல இடங்களில் வழிப்பறிக் கொள்ளைகள், திருட்டுகள், கன்னக் களவுகள் எல்லாம் செய்து 1986 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு கொலை வழக்கிலும் அவன் சிக்கி மேற்படி நீலான் என்கிற நீலகண்டன் 1988 ஆம் ஆண்டு தமிழ் நாடு கள்ளச்சாராயக்காரர்கள், வனகுற்றவாளிகள், குண்டர்கள் விபச்சாரத் தொழில் குற்றவாளிகள் மற்றும் குடிசைப் பகுதி ஆக்கிரமிப்பாளர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டப்படி 17–9–1988 ஆம் ஆண்டிலிருந்து ஓராண்டு தண்டனை அடைந்து சிறையிலே இருந்தவர். சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இவர் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ளார்.

குறிப்பாக செங்கை-அண்ணா மாவட்டத்தில் 28–1–1990 மற்றும் 5–2–1990 ஆகிய தேதிகளில் நிகழ்ந்த 7-க்கு மேற்பட்ட கொள்ளை வழக்குகளில் இவர் சம்பந்தப்பட்டுள்ளார் என்று தெரிகிறது. மேற்படி வழக்குகளில் 15 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட சொத்துக்கள் களவு போனதாகவும் கணக்கிடப்பட்டு உள்ளது. இது சம்பந்தமாக செங்கை—அண்ணா மாவட்ட காவல் துறையினர் மேற்படி நீலான் என்கின்ற நீலகண்டனைத் தீவிரமாகத் தேடி வருகிறார்கள். அதனையொட்டி, அந்த நீலகண்டனை மருமகனாகப் பெற்றிருக்கின்ற எல்லம்மாள் அவர்கள் போலீசாரால் விசாரிக்கப்பட்டிருக்கிறார்கள். போலீசார் கூறிய குற்றச்சாட்டுகளை எதிர்த்து அவர்களும் ஒருவழக்குத் தொடர்ந்து அந்த வழக்கு விசாரணையில் இருக்கிறது. நியாயப்படி பார்த்தால் வழக்குகள், விசாரணையில் இருக்கின்ற நேரத்தில் இவ்வளவு விவரமாகக் கூட இங்கே பேசியிருக்கக்கூடாது. சென்னை உயர்நீதி மன்றத்திலே 'ஹேபியஸ் கார்ப்பஸ்' ரிட் மனு 1999/99 எல்லம்மாள் மகன் திரு. வி. எஸ். இராஜேந்திரன், வயது 28, பெரியார் நகர், அவருடைய தகப்பனார் பெயர் சிவா நாயுடு என்பவரால் 23–2–1990 அன்று தாக்கல் செய்யப்பட்டு குற்றப்பிரிவு ஆய்வாளர் அதற்கு எதிர் மனு 9–3–1990 இல் தாக்கல் செய்து மேற்படி வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்திலே விசாரணையில் இருந்து வருகிறது. இதற்கிடையே தன் மருமகனைக் காவல்துறையினர் தேடுவதைத் தடுப்பதற்காகவும், அவரைக் குற்றத்திலிருந்து தப்புவித்து சட்டத்தின் பிடியில் அவரைக் கொண்டு வராமல் இருக்கவும் எல்லம்மாள் செம்பியம் காவல் நிலைய அதிகாரிகள்மீது வீணாகப் புகார் கொடுத்துள்ளார் என்றும் எனக்குப் போலீஸ் தரப்பிலிருந்து தகவல் தரப்பட்டிருக்கிறது. இருந்தாலும் மேலும் இதைக் கவனமாக ஆய்ந்து விசாரித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.